හාණ්ඩාගාර මෙහෙයුම් දෙපාර්තමේන්තුව
திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
**Department of Treasury Operations**

තැ.පෙ.1559, මහා භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
தபெ. 1559,பொது திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
P.O.Box: 1559, General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General | දුරකථන / தொலைபேசி / Telephone: +94 11 2484729 | ෆැක්ස් / பெக்ஸ் / Fax: +94 11 2431498 | ඊ-මේල් / மின்-அஞ்சல் / E-mail: dgto@tod.treasury.gov.lk |


| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My Number: TOD/REV/M3/02/01 | ඔබේ අංකය / உமது இல / Your Number: | දිනය / திகதி / Date: 26.11.2019 |

**திறைசேரி செயற்பாட்டுச் சுற்றறிக்கை இலக்கம் : 07/2019**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்,

**2019.12.31 அன்றுள்ளவாறு நிலுவை வருமான அறிக்கைகளை முன்வைத்தல் .**

அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட இலக்கம் : 01/2015 மற்றும் 2015.07.20 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் அதன் திருத்தங்கள் உள்ளடக்கிய 2016.12.30ஆம் திகதி வெளியிடப்பட்ட அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015(V) தங்களது மேலான கவனத்திற்கு.

02. அதற்கமைய, வருமனக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நி.பி.128(2)(இ)ல் உள்ள ஏற்பாடுகளுக்கமைய தமது பொறுப்பின் கீழுள்ள வருமானக் குறியீடுகளுக்கு அமைய நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும். திறைசேரி செயற்பாடுகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர் என்ற வகையில் பின்வரும் வருமானக் குறியீட்டு இலக்கங்களின் கீழ் ஒன்று திரட்டப்படுகின்ற நிலுவை வருமானம் தொடர்பில் உரிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களை திரட்டி நிலுவை வருமானக் கணக்கு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் நாயத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

| **வருமான தலைப்பு குறியீட்டு இலக்கம்** | **விபரம்** |
|---|---|
| 20.02.01.99 | அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானம் - ஏனைய வாடகைகள். |
| 20.02.02.99 | வட்டி – ஏனையவை |
| 20.03.01.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - திணைக்கள விற்பனைகள் |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிருவாகக் கட்டணங்கள், கொடுப்பனவுகள் - நானாவித |
| 20.03.03.02 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - தண்டப் பணமும் அரச உடமையாக்கல்களும் - ஏனையவை |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுகைகள் |

03. ஆகவே, மேற்குறித்த வருமானக் குறியீட்டு இலக்கங்கள் ஒவ்வொன்றுடனும் தொடர்புற்ற சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு அமைய, வருமான குறியீட்டு இலக்கங்களுக்கான நிலுவை வருமானம் கணக்கு அறிக்கைகளுடன் முறையாக ஒப்பீடு செய்யப்பட்டு அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் : 01/2015 மற்றும் 14.09.2018 ஆம் திகதி திறைச்சேரி செயற்பாட்டு சுற்றறிக்கை இலக்கம் : 05/2018 பிரகாரம் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவம் இல TOD/REV/01 க்கு அமைய தயாரிக்கப்பட்ட 2019.12.31 அன்றுள்ளவாறான நிலுவை வருமானக் கணக்கு அறிக்கையினை 2020.01.16 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பணிவாய் வேண்டிக்கொள்கிறேன். குறித்த தினத்தன்று நிலுவை வருமானங்கள் ஏதும் இல்லாத பட்சத்தில் தயவு செய்து வெற்றுக் கணக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கவும்.

04. மேலும் , ஒவ்வொரு ஆண்டுடனும் தொடர்புபுற்ற நிலுவை வருமானத்திற்கு நேரொத்த வகையில் 2019 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட வருமானங்கள் தொடர்பான விபரங்கள், அக்காலப்பகுதியினுல் நி.பி. 113 க்கு அமைய திறைசேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கு அமைய விடுவிக்கப்பட்ட ஒவ்வொரு வருமானம் சம்பந்தமான விபரங்கள் என்பனவும் மாதிரிப் படிவம் இல TOD/REV/02 என்ற படிவத்திலும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

05. அத்துடன் அரசிறைக் கொள்கை சுற்றறிக்கை இல 01/2015(V) பிரகாரம் வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான விரிவான கணக்கு அறிக்கை ஒன்றினை உரிய முறையில் பராமரித்துச் செல்லுதல் வேண்டும்.

**ஒப்பம் / கே.டீ.ஆர்.ஒல்கா**
**பணிப்பாளர் நாயகம்**
**திறைசேரி செயற்பாட்டுகள் திணைக்களம்**

பிரதிகள் : 1. கணக்காய்வாளர் நாயகம்.
2. பணிப்பாளர் நாயகம், அரசிறைக் கொள்கைகள் திணைக்களம்.

இணைப்பு : **TOD/REV/01**

# நிலுவை வருமானம் பற்றிய அறிக்கை – 2019.12.31

(i) சட்டம் / அதிகாரம் :- (சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் / திணைக்களங்கள் அல்லது மாவட்ட செயலகங்கள்)....................................................

(ii) வருமான வகை:-...................................................................

(iii) வருமானப் குறியீடு :-...........................................................

| விபரம் | நிலுவை வருமானம் | | | | | நிலுவைக்கான காரணம் | நிலுவைத் தொகையினை மீளஅறவிடுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்குள்ள இயலுமை பற்றிய சான்றிதழ் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016.12.31 வரையான நிலுவைத் தொகை ரூபா. | 2017 ஆம் ஆண்டிற்கான திரட்டிய நிலுவைத் தொகை ரூபா. | 2018 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூபா. | 2019 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைத் தொகை ரூபா. | 2019.12.31 அன்றுள்ளவாறு மொத்த நிலுவைத் தொகை (2+3+4+5) ரூபா. | * | * | * |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | | | | | | | | |

2019.06.30 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமான அறிக்கை மூலம் இந்நிரல்களின் கீழ் அறிக்கையிடப்பட்ட ஒவ்வொரு நிலுவை வருமானங்களும் மேலே உள்ள அட்டவணையின் நிரல் இலக்கம் 2 - 4 வரையும் 2019 ஆம் ஆண்டில் அறவீடுகள் / விடுவிப்பு ஏதும் இருப்பின், அவை கழிக்கப்பட்டு பின்னர் கிடைக்கப் பெறும் மீதியோடு இந்நிரல்களின் கீழ் காட்டப்படும் கூட்டுத் தொகையும் சமப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், குறித்த வேறுபாட்டிற்குறிய விரிவான விளக்கம் இணைப்பாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

* நிரல் இல. 7, 8 மற்றும் 9 ஆகியவற்றை சரியான காரணத்துடன் பூர்த்திசெய்வது கட்டாயமானதாகும்.

**சரியானதென உறுதிப்படுத்துகிறேன்**

**தயாரித்தவர் :**...................................................

.................................................................................................

**பரீட்சித்தவர் :** ...................................................

**(பி.கணக்கீட்டுஉத்தியோகத்தர்/ பணிப்பாளர் (நிதி)/ பிரதான கணக்காளர்/ கணக்காளர்**

**செயலாளர்/திணைக்களத் தலைவர்/மாவட்டச் செயலாளர்**
**(உத்தியோக முத்திரை)**

**திகதி :-** ...............................

இணைப்பு : TOD/REV/02

## 2019.12.31 ஆம் திகதிக்கு நிலுவை வருமானத்தை சேகரித்தல் பற்றிய மற்றும் அனுமதிக்கப்பட்ட வருமான விடுவிப்பு தொடர்பான அறிக்கை

அமைச்சு/ திணைக்களம் / மாவட்ட செயலகங்கள் வருமான குறியீடு :

| விபரம் | 2019 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தினைத் திரட்டுதல் | | | | * 2019 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தினை விடுவித்தல் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016.12.31 வரை கிடைக்கப் பெற்ற நிலுவை தொகை | 2017 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற நிலுவைத் தொகை | 2018 ஆண்டில் கிடைக்கப் பெற்ற நிலுவைத் தொகை | மொத்த கிடைக்கப் பெற்ற நிலுவைத் தொகை (2+3+4) | 2016.12.31 வரை | | 2017 | | 2018 | | மொத்த நிலுவைத் தொகையில் விடுவிக்க ப்பட்ட மொத்த தொகை (6+8+10) |
| | | | | | உரிய காலப்பகுதியிலவ ிடுவிக்கப்பட்ட நிலுவைத் தொகை | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | உரிய ஆண்டில் விடுவிக்கப்பட்ட நிலுவைத் தொகை | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | உரிய ஆண்டில் விடுவிக்கப்பட்ட நிலுவைத் தொகை | நி.பி 113 ற்கு அமைய விடுவிப்புச் செய்ய பொது திறை சேரியினால் வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் மேற்கோள் இலக்கமும் திகதியும் | |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | | ரூபா. | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) |
| | | | | | | | | | | | |

* வருமான குறியீட்டு இலக்கம் ஒவ்வொன்றின் கீழும் வரும் ஏதேனுமொரு வருமானத்தினை விடுவிப்பதற்காக நி.பி. 113 க்கு அமைய பொது திறைசேரியின் முன் அனுமதி பெறப்படுதல் வேண்டும். ஆதலால், பொது திறைசேரி (அரச நிதி திணைக்களம்) ஆல் விடுவிப்புச் செய்ய பெறப்பட்ட ஒப்புதல் இங்கு குறிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்காகப் பெறப்பட்ட ஒப்புதல் கடிதத்தின் பிரதி ஒவ்வொன்றும் இத்தோடு இணைக்கப்படுதலும் வேண்டும்.

சரியானதென உறுதிப்படுத்துகிறேன்

தயாரித்தவர் :.....................................................

.............................................................................

பரீட்சித்தவர் : .....................................................

(பி.கணக்கீட்டுஉத்தியோகத்தர்/ பணிப்பாளர் (நிதி)/ பிரதான கணக்காளர்/ கணக்காளர்

செயலாளர்/திணைக்களத் தலைவர்/மாவட்டச் செயலாளர்

(உத்தியோக முத்திரை)

திகதி :- ................................